www.tamilarangam.net

# போலி முகத்திரையைக் கிழித்தெறிவோம்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ( PLOT ) கடந்த சில வாரங்களாக தமது இயக்கத்திலிருந்து குறிப்பிட்ட பல தோழர்கள் தலைமறைவாகி விட்டதாகவும் அவர்கள் கழகப்பணத்தை மோசடி செய்ததாகவும், பற்றுச்சீட்டுக்களில் மோசடி செய்ததாகவும், பெண்களைக் கற்பழித்தது போன்ற பல அபாண்டமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி மக்கள் மத்தியிலும் தோழர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்ததோடு மட்டுமல்லாமல் அவர்களைக் கைது செய்ய உதவ வேண்டுமெனவும் மக்களையும் தோழர்களையும் கேட்டிருந்தனர். அவர்களை கைதுசெய்ய முடியாதவிடத்து காணுமிடத்தில் சுட்டுக் கொலை செய்யப்போவதாகவும் கூறியிருக்கின்றனர்.

## நடந்த உண்மை என்ன?

தமிழீழ மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக போராட முன்வந்த நாம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொள்கையை ஏற்றுக் கொண்டு இதுவரைகாலமும் செயற்பட்டு வந்தோம் என்பது உண்மையே! ஆனாலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் செயற்பட்டு வந்த நாம் கழகத்தின் கடந்தகால செயற்பாடுகள் சம்பந்தமாக கழகத்தின் சுயவிமர்சனத்தையும் உட்கட்சிப் போராட்டத்தின் தேவையையும் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளோம். ஆனால் இவையெல்லாம் நிராகரிக்கப்பட்டும் உண்மைக்குப் புறம்பான பதில்களைத்தந்தும் எமது கோரிக்கைகள் மறுக்கப்பட்டதுமான நிலையில் நாம் அதிருப்தி அடைந்திருந்தோம். இயக்கங்கள் **ஜனநாயகம் அற்ற தன்மை, உட்கட்சிப் போராட்டத்தை நடத்த முடியாத நிலை, தனிநபர் பயங்கரவாதப் போக்கு, உட்கொலைகள்** இவையே இன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் மேலோங்கியுள்ளது. இவற்றையெல்லாம் விமர்சனமூலம் திருத்தமுடியுமெனவும் நம்பியிருந்த நாம் இயலாத கட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இருந்து ஒதுங்கவேண்டிய நிலைக்கு வந்தோம்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இத்தகைய நிலையே கழகத்தின் மத்திய குழுவின் உறுப்பினர்கள் பலரை இயக்கத்தில் இருந்து வெளியேறச் செய்துள்ளது. இவ்வாறுவெளியேறிச் சென்ற மத்திய குழு உறுப்பினர்களுக்கும் எமக்கும் தொடர்புண்டென்று எம்மீது சந்தேகித்ததாலும், கழகத்தின் தவறான போக்கை விமர்சித்ததாலுமே எம்மை விசாரணை என்ற போர்வையில் பின்தளம் வருமாறு அழைத்திருந்தனர்.

## நாம் ஏன் தலை மறைவானோம்?

இதுவரை காலமும் தமிழீழத்தில் இருந்து விசாரணை என்ற போர்வையில் பின்தளம் அழைக்கப்பட்டவர்கள் பற்றிய உண்மை நிலையை எக்காலப் பகுதியிலும் அறிய முடியாத நிலைமையே இருந்து வந்திருக்கின்றது எனவே இத்தகைய விசாரணைகளுக்காக நாம் பின்தளம் செல்லத்தயாராக இருக்கவில்லை. இதன் காரணமாகவே நாம் தலைமறைவானோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது முனைப்பாக மாறிவரும் இக்கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்க சிறீலங்கா இனவாத அரசு தன் முழுப்பலப் பிரயோகத்தையும் கையாண்டுவரும் இவ்வேளையில் நாம் தலைமறைவாக வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது மிகவும் வேதனைப்படத்தக்கதும், தமிழ் பேசும் மக்களைப் பலவீனப்படுத்தத்தக்கதுமான ஒரு செயலாகும் என்பதை நாம் உணர்கின்றோம். இந்நிலையில் நாம் தலைமறைவாக வேண்டியதன் உண்மை நிலையை மக்கள் முன் தெளிவுபடுத்த வேண்டியவர்களாக தவிர்க்க முடியாதபடி தள்ளப்பட்டுள்ளோம். எம்மீது சுமத்தப்பட்ட அபாண்டமான கேவலமான குற்றச்சாட்டுகளும் வீண்பிரச்சாரங்களுமே எம்மை இந்நிலைக்கு கொண்டுவந்திருக்கின்றது.

## செய்த குற்றம் தான் என்ன?

**தமிழீழத்திற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் போராட முன்வந்தது குற்றமா? அல்லது போராட்டத்திற்காக மக்களை அணிதிரட்டியது குற்றமா? தவறான பாதையில் சென்ற கழகத்தின் மீது விமர்சனத்தை முன்வைத்தது குற்றமா?** பெண்களைக் கற்பழித்தோம், கழகப்பணத்தை மோசடி செய்தோம், பற்றுச்சீட்டில் மோசடி செய்தோம் என்று எம்மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள் இந்தப் பரிசுத்தமானவர்கள். இவர்கள் இக்குற்றச்சாட்டுகளை மக்கள் முன்னிலையில் நிரூபிக்கத் தயாராக இருக்கின்றார்களா? அபாண்டமான பொய்களை ஆணித்தரமாக திரும்பத்திரும்பக் கூறுவதால் எந்தப் பொய்யும் உண்மையாகிவிடாது. கருத்து முரண்பாடுகளை பரஸ்பரம் பேசித் தீர்க்க வக்கில்லாதவர்கள் எம்மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி எம்மை மக்கள் மத்தியில் இருந்து தனிமைப்படுத்த முனைகின்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விமர்சனங்களுக்குத் தீர்வு கொலைகளா?

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) மாக்சிய - லெனினிய சித்தாந்த வழிகாட்டலில் வளர்ந்த இயக்கம்(?) ஜனநாயக ரீதியில் வளர்ந்த இயக்கம்(?) விமர்சன சுயவிமர்சன உட்கட்சிப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்(?) ஆனால் இவர்கள் தான் கழகத்தின் மீது விமர்சனங்களை முன்வைப்போரை களைகளென்று முத்திரை குத்துகின்றனர். படுமோசமான குற்றச்சாட்டுகளை அவர்கள் மீது வலிந்து சுமத்தி சித்திரவதை செய்கின்றனர். படுகொலை செய்கின்றனர். இவர்கள் தான் எம்மைப்பார்த்து களைகளென்கின்றனர்.

இயக்கங்களுக்குள்ளும் இயக்கங்களுக்கிடையிலும் தோன்றும் கருத்து முரண்பாடுகள் துப்பாக்கி முனையில் தீர்க்கப்படுவதை வன்மையாகக் கண்டித்து அறிக்கை மேல் அறிக்கையாகவிடும், இவர்கள்தான் தமது இயக்கத்திற்குள் தோன்றும் கருத்து முரண்பாடுகளை மிகவும் கச்சிதமாக துப்பாக்கி முனையில் தீர்த்துக்கொள்கின்றனர். இவர்கள் களைகளா? அல்லது நாம் களைகளா? மக்களே சிந்தியுங்கள்!

புரட்சிகர முத்திரை குத்திக்கொண்டும், புரட்சிகர சொற்றொடர்களில் மறைந்திருந்து கொண்டும், புரட்சிகர தத்துவத்தை வெறுமனே வாய்ச்சவாடல் அடித்துக் கொண்டு. மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறலாம் என்ற கபட நோக்கம் இவர்களிடத்தில் இருந்திருக்கின்றதென்பது வெள்ளிடைமலை. இவர்கள் எவ்வளவு காலம்தான் போலிவேடம் போட்டுக் கொண்டு மக்கள் மத்தியில் நடமாடப் போகின்றார்கள்? தமது போலி வேடங்கள் அம்பலத்திற்கு வராது என்ற மனவைராக்கியத்தில் உள்ளனரா? மக்களை என்ன மந்தைக் கூட்டமென நினைத்தார்களா? அல்லது வடிகட்டிய முட்டாள்கள் என நினைத்தார்களா? இவர்கள் கூறும் அப்பட்டமான பொய்களை எவ்வளவு காலம் மக்கள் கேட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்? இவற்றிற்கெல்லாம் மக்களுக்கு பதில் கூறவேண்டியநாள் வெகு தொலைவில் இல்லை என்பதை இவர்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

## இதுவா மக்கள் இராணுவம்?

நாம் தலைமறைவானதைத் தொடர்ந்து எம்மைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு பல தோழர்களை கழக இராணுவத்தினர் சிலர் அடித்துத்துன்புறுத்தியதுடன் எம்மை எப்படியாவது பிடித்து தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் வற்புறுத்தியுள்ளனர். அத்துடன் நாம் மறைந்திருக்கின்றோம். என்ற சந்தேகத்தின் பேரில் யாழ் நகரில் மூன்று கிராமங்களுக்கு ஆயுதபாணிகளாகச் சென்ற கழக இராணுவத்தினர் அந்தக் கிராமங்களைச் சுற்றி வளைத்து (அரச கூலிப்படையிலும் மோசமாக) சந்தேகிக்கப்பட்ட வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் எம்மைத் தேடுவதாகக் கூறி அவ்வீடுகளைச் சேதப்படுத்தியது மட்டுமல்லாமல் அவ்வீடுகளில் இருந்த பெண்களை மனிதாபிமானமற்ற முறையில் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களால் பேசியும், அவ்விடங்களில் நின்ற மக்களை ஆயுதம் கொண்டு மிரட்டியுமுள்ளனர்.

இச்சம்பவங்கள் குறித்து கழக இராணுவத்தினர் சிலரின் நடவடிக்கைகள் குறித்தும் நாம் விவரிக்க வேண்டியதில்லை. சம்பவங்கள் நடைபெற்ற இடங்களில் இவர்களின் மிலேச்சத்தனமான செயல் கண்டு மக்கள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர். இவர்களது இராணுவம்தான் மக்கள் இராணுவமா? இவர்களா மக்களின் விடுதலையை வென்றெடுக்கப் போகின்றார்கள்? இவர்களது கையில் ஆட்சியில்லாத போது மக்களை எதிர்த்து அடக்கியாள துணிந்து விட்டார்கள் என்றால் இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினால் மக்களின் நிலைதான் என்ன? மக்கள் எழுச்சி கண்டு உலக ஏகபோக முதலாளித்துவவாதிகளும் அவர்களுக்காக கண்ணீர் வடிக்கும் தரகு முதலாளித்துவ அரசுகளும் நடுங்கும் இக்கால கட்டத்தில் இவர்களால் மக்கள் சக்தியை புரிந்து கொள்ள முடியவில்லையா? மக்களே சிந்தியுங்கள்! செயற்படுங்கள்.

## எதற்காக அவர்களுக்கு துப்பாக்கி?

நாம் எந்த இலட்சியத்திற்காகப் போராடுகின்றோம் எந்தக் கொள்கைக்காக, எந்த மக்களின் விடுதலைக்காக போராடுகின்றோம்? என்பதை விட்டு தமது பாதையினின்றும் விலகி சகதோழர்களுக்கெதிராகவே துப்பாக்கி தூக்குமளவிற்கு வந்துள்ளனரே; நண்பன் யார்? எதிரி யார்? களை எது? பயிர் எது? என இனங்காண முடியாத இவர்களுக்கெல்லாம் துப்பாக்கி ஒரு கேடா? இவர்களுக்கு எதற்காகத் துப்பாக்கி? அப்பாவிப் பொதுமக்களையும் போராளிகளையும் அழிக்கவா? இன்று சக தோழர்களுக்கு எதிராகவே துப்பாக்கி தூக்கியவர்கள் நாளை மக்களுக்கெதிராக அதனைத் திருப்பமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இதிலிருந்து இவர்கள் மக்களையும் மக்களின் விடுதலையையும் எந்தளவிற்கு நேசிக்கின்றனர் என்பதை புரிந்து கொள்ள முடியும். இதற்கு காரணம் என்ன? ஆயுதங்களால் எதனையும் சாதித்து விடமுடியும் என்று இவர்கள் நம்புகின்றனர். மக்கள் சக்தியை பலவீனமானதாகக் கருதுகின்றனர் மக்கள் மட்டுமே உலகின் உந்துசக்தியென்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதை இவர்கள் அறியவில்லைப் போலும். இனியாவது இதனை உணர்ந்து திருந்திக்கொள்வார்கள் என நினைக்கின்றோம். மாறாக ஆயுதங்களால் மட்டும் எதனையும் சாதித்து விட முடியும் என்று மார்தட்டித்திரிவார்களேயானால் வரலாறு இவர்களுக்கு உண்மையைப் புகட்டும்.

## சகதோழர்களுக்கு நடந்ததென்ன?

தமிழீழ மக்கள் விடுதலைக்கழக இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் 24-03-1985 நள்ளிரவு திருநெல்வேலியைச் சேர்ந்த மாஸ்ரர், சுரேஸ், இடிஅமீன் ஆகியோரை அவர்கள் உறங்கிக்கொண்டிருந்த வீட்டை முற்றுகையிட்டு கைது செய்ததுடன் அந்த இடத்தில் வைத்தே மிருகத்தனமான முறையில் தாக்கி படுகாயப் படுத்தியதோடு மட்டுமல்லாமல் வீதியில் நிர்வாணமாகவும் கொண்டு சென்றுள்ளனர். மாஸ்ரரை விசாரணைக்காக கைது செய்ததாக கூறியுள்ளனர். இதுவரை விசாரணை நடத்தினார்களா? அல்லது உயிருடன் இருக்கின்றாரா? இவர்களின் நோக்கம் என்ன? இதற்கு இவர்கள் கூறும் காரணம் தான் என்ன?

தோழர் மாஸ்ரரை விசாரணை செய்ய பின் தளம் கொண்டு செல்ல வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள் தமிழீழத்தில் விசாரணை செய்ய இவர்களிடம் நிர்வாகம் இல்லையா? அல்லது தமிழீழத்தில் விசாரணை செய்தால் தங்கள் போலி வேடங்கள் அம்பலத்திற்கு வந்துவிடுமென பயப்படுகின்றார்களா? பின்தளம் கொண்டு சென்று சித்திரவதை செய்து, துன்புறுத்தி ஒப்புதல் வாக்குமூலம் எடுத்துவிட்டு கொலை செய்வதுதான் அவர்களது நோக்கமென எமக்கு புரியாதா? **இவர்களது போலிவேடங்களும் பிற்போக்குத் தனங்களும் மக்கள் முன் அம்பலத்திற்கு வரும்பொழுது எங்கே ஓடி ஒழிந்து கொள்ளப் போகின்றார்கள்?**

தோழர் சுரேன், இடிஅமீன் ஆகியோரை மாஸ்ரருடன் கைது செய்து சென்றுள்ளனர். அவர்கள் செய்த குற்றமென்ன? மக்களின் விடுதலைக்காய் நாளும் பொழுதும் உழைத்ததுதான் அவர்கள் செய்த குற்றமாகும். தோழர் மாஸ்ரருடன் உறங்கிக் கொண்டிருந்த ஒரே காரணத்திற்காக இருவரையும் கைது செய்து சித்திரவதை செய்துள்ளனர் இதிலிருந்தே இவர்களது அரசியல் வங்குரோத்து தனத்தை காணமுடிகிறது தோழர்கள் மாஸ்ரா, சுரேன், இடிஅமீன் ஆகியோர் மீது குற்றமேதும் இருப்பின் அவர்களை மக்கள் முன் அல்லது அமைப்புக்கள் முன் விசாரணை செய்ய வேண்டும் அதற்கு சம்மந்தமில்லையாயின் உடன் விடுதலை செய்ய வேண்டும். இல்லையேல் **கழகத்திற்கு மக்கள் தக்க பதிலடி கொடுக்க வேண்டிய நிலை உருவாவது தவிர்க்க முடியாமல் போய் விடும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.**

## தோழர்களே!

**எமது இலட்சியமென்ன? எமது கொள்கையென்ன? எமது பாதை எது? எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றோம்?** என்பதை ஒரு கணம் சிந்தியுங்கள் அதே வேளை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இன்று சென்று கொண்டிருக்கும் பாதையும் நன்கு ஆய்வுசெய்யுங்கள் அதன் பின் நீங்களே ஒரு தீர்க்கமான முடிவுக்கு வாருங்கள் ஏனெனில் உங்களது தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் ஒரு பொழுதும் வீண் போக விடக்கூடாது,

நாம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்காகவும் மக்கள் விடுதலைக்காகவும் எவ்வளவு தூரம் பற்றுறுதியுடனும் விசுவாசத்துடனும் உழைத்து வந்தோம் என்பதனையும் நாம் தலைமறைவானதையடுத்து எம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் எந்தளவிற்கு உண்மையுள்ளதென்பதையும் நீங்கள் அறிவீர்கள். கழகத்தவர்களின் அராஜகப் போக்குகளுக்கும் வெறிச் செயல்களுக்கும் மத்தியில் நாம் பொறுமை, நிதானம் பொறுப்புணர்ச்சி என்பதைக் கடைப்பிடித்துக் கொண்டதன் விளைவாக ஆத்திரமடைந்தவர்கள் எமக்கு முன்வந்து பாதுகாப்பு தந்துதவியவர்களை ஆயுதங்களுடன் இவர்களை அணுக விரும்பியிருந்தால் அணுகியிருப்போம். ஆனால் **நாம் மக்களை நேசிக்கின்றோம். மக்களின் விடுதலையை நேசிக்கின்றோம். கருத்து முரண்பாடுகளை துப்பாக்கி முனையில் தீர்த்துக்கொள்வதில் எமக்கு உடன்பாடு கிடையாது. அதனை அநாகரிக அரசியலாகக் கருதுகின்றோம். இதன் காரணமாகவே நாம் மிகுந்த நிதானத்தைக் கடைப் பிடித்து வந்துள்ளோம்.**

தோழர்களே! இன்று எமக்கெதிராக கழகத்தினரால் தூக்கப்பட்ட துப்பாக்கி நாளை உங்களுக்கெதிராகவும் தூக்கப்படும். அப்போது நாம் யார்? கழகத்தவர் யார்? எனப் புரிந்து கொள்வீர்கள்.

## தமிழீழ மக்களே!

நாம் எவ்வாறு விடுதலைக்குரிய வேலைகளைச் செய்து வந்தோம் என்பதை நீங்களே அறிவீர்கள், நாங்கள் ஒன்றும் மக்களிடம் இருந்து தனிமைப்பட்டிருக்கவில்லை. மக்களிடமே தான் வாழ்ந்திருந்து வேலைகளைச் செய்து வந்தோம். இன்றும் மக்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எம்மை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும் ஒரு நோக்குடனே இவர்கள் எம்மீது பணமோசடி, பெண்களைக் கற்பழித்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருக்கின்றார்கள். நாம் மக்களிடம் வேரூன்றியிருந்து மக்களின் விடுதலைக்காக உழைத்து வந்திருக்கின்றோம் இதுவே எங்களிடமுள்ள ஒரே ஒரு பலமான சக்தி. அந்த சக்தியிடமிருந்து எம்மை அந்நியப்படுத்தும் நோக்குடனேயே தமிழீழ விடுதலைக் கழகம் இன்று அவதூறான பிரச்சாரங்

www.tamilarangam.net

களைச் செய்து வருகின்றது. ஆனால் இவர்களால் எம்மை பலமான மக்கள் சக்தியிடம் இருந்து ஒரு பொழுதும் பிரிக்கவோ அந்நியப்படுத்தவோ முடியாதென்பதை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் புரிந்து கொண்டிருப்பார்கள். புரிந்து கொள்வார்கள். சில வேளைகளில் இவர்களுக்கு இதனைப் புரிந்து கொள்ள கால அவகாசம் அதிகமாகத் தேவைப்படலாம். ஆனால் என்றோ ஒரு நாள் இவர்கள் புரிந்து கொள்ளத்தான் போகின்றார்கள்

மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் மக்களின் கோரிக்கைகள், அபிலாசைகள் போன்றவற்றிற்கு செவிமடுக்காதவர்கள் எங்கோவொரு மூலையில் ஒதுக்கப்படுவார்கள் என்பது வரலாற்று உண்மையாகும் அது தவிர்க்க முடியாததும் கூட.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் நாம் கைது செய்யப்படலாம் அல்லது கொலை செய்யப்படலாம் ஆனாலும் நாம் எமது உயிர்களுக்கு அஞ்சவில்லை, எமது உண்மை நிலையை மக்களாகிய உங்களுக்கு தெளிவு படுத்துவதற்காகவே இத் துண்டறிக்கையை வெளியிடுகின்றோம்.

இவர்கள் எம்மைக் கொலை செய்து புதைக்கலாம், எம்போன்ற பலரைக் கொலை செய்து புதைக்கலாம், ஆனால் எமது இலட்சியம், நாம் முன்னெடுத்துச் சென்ற கொள்கையை, உண்மைமையை, நீதியை அல்ல. ஏனெனில் நாம் மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எம்மைக் கொலை செய்ய வேண்டுமாயின் எம்மை நேசிக்கின்ற முழு மக்களையும் கொலை செய்ய வேண்டும்.

மக்கள் மட்டுமே வரலாற்றைப் படைப்பவர்கள்; தனி மனிதர்களல்ல;

## அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்.

ஏப்பிரல் 08,1985
தமிழீழம்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து (PLOT)
வெளியேறியவர்கள்

TAMILS FOR A DEMOCRATIC EELAM
B M BOX 4338
LONDON WC1N 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்